**I.A.351/2017, I.A.574/2016, O.S.82/2016 04.02.2019**

**எ.ம.சா.3, மாயகவுண்டர், த/பெ.சாமிகவுண்டர்**

சாட்சி முதல் விசாரணை முதல் தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

என்னை இம்மனுவில் சாட்சியம் அளிக்க ஆஜர் 1ஆம் எதிர்மனுதாரர் அழைத்தார். அவர் எனது ஊர்காரர். உறவினர் அல்ல. மனுதாரருக்கு நான்தான் சொத்தை விற்றேன். நான் விற்ற சொததின் சர்வே எண்.165/5 என்றால் ஞாபகம் இல்லை. விஸ்தீரணம் சுமார் 1 1/2 ஏக்கருக்கு மேல் இருக்கும். மனுசொத்தின் நான்குபுற செக்குபந்தி தெரியும். விற்கும்வரையில் சொத்தின் சுவாதீனம் என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான். விற்கும் சமயத்திலேயே நான் கிரையம் கொடுத்த சொத்தின் சுவாதீனத்தை மனுதாரரிடம் கொடுத்துவிட்டேன். அந்த வகையில் மனுசொத்தின மனுதாரர்தான் தொடர்ந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள எனது மருமகன் பெயர் கோவிந்தசாமி. பின்னிட்டு சாட்சி தான் முன்னின்று சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாகவும், சொத்து மருமகனுடையது என்றும் கூறுகிறார். மனுதாரர் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிரையப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன். நிலத்துக்கான வழக்கு குறித்துதான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். வேறு எதற்கும் சாட்சியம் அளிக்க வரவில்லை. என்ன மனு மனுதாரர் தாக்கல் செய்திருக்கிறார் என்று தெரியாது. அதற்கு 1ஆம் எதிர்மனுதாரர் என்ன பதில் போட்டிருகிகறார் என்று தெரியாது. மொத்தம் எத்தனை நபர் மீது மனு போடப்பட்டிருக்கிறது என்ற விவரமும் தெரியாது. மனு பிரச்சனையில் யார் யார் சம்மந்தப்பட்டிருக்கிறார் என்ற விவரமும் தெரியாது. பிரச்சனை குறித்து எப்பொழுது எல்லாம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று தெரியாது. மனுதாரர் குடும்பத்தார் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றது குறித்த பிரச்சனை எனக்கு தெரியாது. மனுசொத்து குறித்து நீதிமன்றத்தில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரமும் தெரியாது. 1ஆம் எதிர்மனுதாரர் என்ன சர்வே எண் கொண்ட சொத்தை பயிர் செய்கிறார் என்ற விவரமும் தெரியாது. மனுதாரர் மற்றும் 1ஆம் எதிர்மனுதாரர் சொத்து வெவ்வேறு சர்வே எண்களில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், மனுதாரருக்கும் சுமுகமான பேச்சுவார்த்தை தற்பொழுதும் இருக்கிறது. எனது முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை யார் சொன்னார்கள் என்று தெரியாது.

**மறு விசாரணை:- இல்லை.**